வளவனூர் பேரூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர் வே. அழகப்பன் அவர்களின் மறைவுக்கு கழகதுணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ், பேரூர் செயலாளர் பா. ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ. சம்பத், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை. சுரேஷ், வழக்கறிஞர் கண்ணப்பன், தொ.மு.ச பொதுச் செயலாளர் வி. சேகர், அமைப்புச் செயலாளர் வேலு, மாவட்டத் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப. அன்பரசு உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

கூட்டுறவுத் துறையின் சார்பில்

26 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சென்னை, பிப்.4-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், நேற்று முன்தினம் (2.2.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் 26 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் ஆணைகளை வழங்கினார்.

கூட்டுறவுத் துறையில் பல்வேறு பதவிகளில் பணிபுரிந்து இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தகுதி பெற்ற 26 நபர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளின் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். அடிப்படையில் 26 நபர்களுக்கு வழங்கப்படுகிறது. இப்பணியிடம் தொகுதி 4-இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட பணியிடங்களாகும். இப்பணியிடத்திற்கான சம்பள விகிதம் நிலை-8 (ரூ.19,500-71,900) ஆகும்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பேசும் போது தெரிவித்ததாவது :

கூட்டுறவுத்துறையில் கடந்த காலங்களில் பணியாற்றி வந்த குடும்பங்களைச் சார்தோர் பணியில் இருந்த காலகட்டங்களில் அவர்கள் இயற்கை எய்தியிருந்தால் அந்த குடும்பத்திற்கான இழப்புகள், குடும்பத்தலைவர்களை இழந்த நிலையில் பொருளாதார நெருக்கடியில் சிக்க நேரிடும் என்ற அடிப்படையில் தான் அரசின் சார்பில் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி ஆணைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கூட்டுறவுத்துறையில் கடந்த காலங்களில் பணிக்காலங்களில் இயற்கை எய்தியவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு பணியினை வழங்குவது என முடிவெடுத்து அதன் அடிப்படையில் இன்றைய தினம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆலோசனையின்படி, இன்னும் சொல்லப்போனால் இந்த பணி ஆணையை கூட அவர்களுடைய தலைமையில், அவர்களுடைய கரங்களால் வழங்கப்பட இருந்தது. ஆனால், வெளிநாட்டுப் பயணம், நிதி நிலைக் கூட்டம், சட்டமன்ற தொடர் கூட்டம் தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வராலாம் என்ற சூழ்நிலையில் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் அந்தந்த துறைகளில் இருக்கக்கூடிய பணிகளை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில், இன்று இந்த 26 குடும்பங்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு பணி நியமன ஆணை வழங்கப்படுகிறது.

இன்று பணி ஆணைகளைப் பெறுகின்ற வாரிதாரர்கள், தங்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எப்படி இந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக தங்களை அர்ப்பணித்து பாடுபட்டார்களோ, அதைப் போல நீங்களும் இந்தத் துறையின் வளர்ச்சிக்கும், அதே நேரத்தில் உங்களுடைய குடும்பத்தின் வளர்ச்சிக்கும் நல்லவர்களாக இருந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நல்லநேரத்தில் உங்களை எல்லாம் அன்போடு வாழ்த்தி, உங்களுக்கெல்லாம் பணி நியமன ஆணைகளை வழங்க வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குன்னூர் நகராட்சித் தலைவர் - கழகப் பொதுக்குழு உறுப்பினர்

எல்.ஷீலா கேத்ரின் மறைவு!

முதல்வர் - மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 4-

குன்னூர் நகராட்சி தலைவரும், தலைமைக் கழக பொதுக்குழு உறுப்பினருமான திருமதி.எல்.ஷீலாகேத்ரின் (68) அவர்கள் 2.2.2024 வெள்ளிக்கிழமை மதியம் 3.30 மணியளவில் மாரடைப்பால் குன்னூரில் இயற்கை எய்தினார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர் இரண்டு முறை தலைமைக் கழகப் பொதுக்குழு உறுப்பினராகவும், இரண்டு முறை குன்னூர் நகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். கழகத்தின் மீது மிகுந்த பாசம் கொண்டவராக கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டுள்ளார். இவர், சிறுபான்மை மக்கள் மத்தியில் மிகுந்த அன்பு கொண்டவராக கழக பணியாற்றி வந்தார்.

இவரது கணவர் ஏற்கனவே காலமாகிவிட்டார். இவருக்கு திருமணமான ஜோஸ்வா ஜான்சன் என்கிற மகனும், ஈவா ஜென் என்கிற மகளும் உள்ளனர்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசின் பட்ஜெட் நாட்டின் வளர்ச்சிக்கான பட்ஜெட் அல்ல!

140 கோடி மக்களின் நலன்களை பலி கொடுக்கும் பட்ஜெட்!

"தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, பிப்.4-

ஒன்றிய அரசின் பட்ஜெட் நாட்டின் வளர்ச்சிக்கான பட்ஜெட் அல்ல. 140 கோடி மக்களின் நலன்களை பெரு நிறுவனங்களுக்கு பலி கொடுக்கும் பட்ஜெட் என "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

2047 ஆம் ஆண்டு இந்தியா வளர்ந்த நாடாகிவிடும் என்றும் அதனை நோக்கிய திசையில் ஒன்றிய அரசின் 2024-25ஆம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட் பயணிப்ப தாகவும் பிரதமர் மோடியும் மத்திய அமைச்சர்களும் பெருமிதம் பொங்க பேசி வருகிறார்கள். 25 கோடிப் பேரை வறுமையிலிருந்து விடுவித்து விட்டதாக அரசு தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. இதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட அளவீடு என்ன என்றால் அந்த 25 கோடிப் பேரையும் அனைவருக்கும் வங்கிக் கணக்கு திட்டத்தின் கீழ் கொண்டு வந்து விட்டோம் என்பதுதான்.

சுகாதாரத்துறைக்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூ.1481 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டாலும், 6 விழுக்காடு பணவீக்கத்தோடு ஒப்பிடும் போது இந்த நிதி குறைவே. விவசாயிகள் பற்றி பேசிய நிதி அமைச்சர் விவசாயிகள் தற்கொலை குறித்து வாய்திறக்கவில்லை. 80 கோடிப் பேருக்கு இலவச தானியத்தைப் பற்றிப் பேசினார். ஆனால் உலகளாவிய பசி குறியீட்டில் இந்தியாவின் தரவரிசையைப் பற்றியோ அல்லது குழந்தை களிடையே காணப்படும் பரவலான ஊட்டச்சத்து குறைபாடு பற்றியோ அவர் பேசவில்லை. நாட்டில் உணவுப் பணவீக்கம் 10 சதவீதமாக உள்ளது. இதைப்பற்றியும் அவர் வாய்திறக்க மறுக்கிறார்.

தீக்கதிர்

2024 பிப்ரவரி 03 சனிக்கிழமை

பெரு நிறுவனங்களுக்கு பலி கொடுக்கும் பட்ஜெட்

2047 ஆம் ஆண்டு இந்தியா வளர்ந்த நாடாகிவிடும் என்றும் அதனை நோக்கிய திசையில் ஒன்றிய அரசின் 2024-25ஆம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட் பயணிப்ப தாகவும் பிரதமர் மோடியும் மத்திய அமைச்சர்களும் பெருமிதம் பொங்க பேசி வருகிறார்கள். 25 கோடிப் பேரை வறுமையிலிருந்து விடுவித்து விட்டதாக அரசு தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. இதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட அளவீடு என்ன என்றால் அந்த 25 கோடிப் பேரையும் அனைவருக்கும் வங்கிக் கணக்கு

நான்கு ஆண்டுகளாக தொழிலாளர்களுக்கான உண்மையான ஊதியம் தேக்கமடைந்துள்ளது.

"நாட்டின் 60 சதவீத செல்வத்தை வெறும் 10 சதவீதத்தினர் வைத்துள்ளனர். அவர்களே தேசிய வருமானத்தில் 57 சதவீதத்தை ஈட்டுகிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் வருமான சமத்துவமின்மை கணிசமாக அதிகரித்துள்ளது. இதையெல்லாம் நிதியமைச்சர் தனது உரையில் மறைத்துவிட்டார். 2014 ஆம் ஆண்டி லிருந்து உருவாக்கப்பட்ட 15 எய்ம்ஸ் நிறுவனங்களில் ஒன்று கூட இன்னும் முழுமை யாக செயல்படவில்லை.

மதுரை எய்ம்ஸ் ஒற்றைச் செங்கலோடு நிற்கிறது. இதில் 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்தநாடாக மாறிவிடுமாம்.

நிதியமைச்சர் சமர்ப்பித்துள்ள 2023-24ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட புள்ளி விவரங்கள் சமூக நலத்திட்டங்களுக்கு ஒன்றிய அரசு எவ்வளவு நிதியை வெட்டியுள்ளது என்பதை அம்பலப்படுத்தியுள்ளது. உணவுப் பொருள்களுக்கான மானியம் 2022-23க்கும் 2023-24க்கும் இடையே ரூ.60,470 கோடி வெட்டப்பட்டுள்ளது. ரசாயன உரங்களுக்கான மானியம் ரூ.62,445 கோடி குறைக்கப்பட்டுள்ளது. எனவே ஒன்றிய அரசின் பட்ஜெட் நாட்டின் வளர்ச்சிக்கான பட்ஜெட் அல்ல. 140 கோடி மக்களின் நலன் களை பெரு நிறுவனங்களுக்கு பலிகொடுக்கும் பட்ஜெட்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் நகர தி.மு.க சார்பில் சுந்தரம் மஹாலில் நடைபெற்ற தேர்தல் பணிக்குழு, பாக முகவர்கள் BLA2, பூத் கமிட்டி BLC உறுப்பினர்கள், கிளைக்கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட க.தேவராஜி எம்.எல்.ஏ. மாநில மருத்துவர் அணி துணைத் தலைவரும், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளருமான எ.வ.வே.கம்பன் கலந்து கொண்டு நாடாளுமன்ற தேர்தல் பணி குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். திருப்பத்தூர் நகரச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

முட்டம் - காட்டுமன்னார் கோயில் பகுதிகளில் திட்டப்பணிகள்!

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், பிப்.4-

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் மற்றும் காட்டுமன்னார் கோயில் பகுதிகளில் நேற்று முன்தினம் (02.02.2024) பல்வேறு திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டியதோடு, முடிவுற்ற திட்டப்பணியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ், முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்.

ஸ்ரீமுஷ்ணம் வட்டம், காவனூர் பகுதியில் நெடுஞ்சாலைத் துறை (திட்டங்கள்) சார்பில் சி.ஆர்.ஐ.டி.பி திட்டத்தின்கீழ் ரூ.27.18 கோடி மதிப்பீட்டில் கள்ளிப்பாடி காவனூர் கிராமங்களை இணைக்கும் வகையில் வெள்ளாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுமான பணிக்கும், ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் 12.44 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அடிக்கல் நாட்டினார். அதனைத் தொடர்ந்து, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தாய்மார்கள் பாலூட்டும் அறை, கழிவறை வசதியுடன் கூடிய நவீன பேருந்து நிறுத்தத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

மேலும், காட்டுமன்னார்கோயில் பேரூராட்சிக் குட்பட்ட பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 32.30 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக பொதுமக்களுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வசதி ஏற்படுத்தும் வகையில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள். மகளிருக்கு இலவச பேருந்து பயணம் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர் கல்வி பயில ஏதுவாக புதுமைப் பெண் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம் திட்டம், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கிடும் வகையில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் அரசு பள்ளி மாணவர்களின் நலன் கருதி காலை உணவு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

ஸ்ரீமுஷ்ணம் வட்டம், கள்ளிப்பாடி காவனூர் கிராமங்களை இணைக்கும் வகையில் உயர்மட்டப் பாலம் அமைக்க இப்பகுதி பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையாக இருந்து வந்ததன் நிலையில்; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்றதன் அடிப்படையில் தற்போது இப்பால பணிக்கு ரூ.27.18 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த பணி வெகுவிரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். கள்ளிப்பாடி காவனூர் இடையே இந்த உயர்மட்ட பாலம் அமைவதால் தங்குதடையின்றி பொதுமக்களுக்குபோக்குவரத்து வசதி ஏற்படும் மேலும் இக்கிராம பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என தெரிவித்தார்.

ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி சிதம்பரம், ஜெயங்கொண்டம், விருத்தாசலம் மற்றும் திருச்சி மார்க்கமாக தினசரி பேருந்துகள் வந்து செல்லும் முக்கிய இடமாக உள்ளது. தற்போது மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தாய்மார்கள் பாலூட்டும் அறை, கழிவறை வசதியுடன் கூடிய நவீன பேருந்து நிறுத்தத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பேரூராட்சிக் பேரூராட்சி சிதம்பரம், ஜெயங்கொண்டம், திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகான முக்கியமான வழி தடங்களாக உள்ளது. மேலும், காட்டுமன்னார் கோயில் வட்டாட்சியர் அலுவலகம், அரசு மருத்துவமனை, நீதிமன்றம், சார்பதிவாளர் அலுவலகம், அரசுக் கலைகல்லூரி, காவல்நிலையம், கருவூலம் உள்ளிட்ட வைகளை பயன்படுத்தவும், பிறதேவைகளுக்கெனவும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து வந்துசெல்வோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மேலும், இப்பேரூராட்சியில் விரிவாக்கத்திற்கு ஏற்ப அனைவருக்கும் தடையின்றி குடிநீர் கிடைக்கபெறுவதற்கும், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.30 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்த திட்டப்பணி தெடாங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பேரூராட்சிக் குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வசதி கிடைக்கப் பெறும்.

இத்திட்டத்தின் மூலம் காட்டுமன்னார்கோயில் பேரூராட்சியில் உள்ள 6,773 குடியிருப்பு வீடுகள் மற்றும் 1,011 வர்த்தக நிறுவனங்கள் பயன்பெறும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காட்டுமன்னார்கோயில் சட்டன்ற உறுப்பினர் ம.சிந்தனைச் செல்வன், சிதம்பரம் சார் ஆட்சியர் செல்வி ரஷ்மி ராணி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கு.வெங்கடேசன், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர்கள்; திருமதி.கோதை, பரந்தாமன், செயல் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, "அண்ணா அறிவாலயத்தில்" நடைபெறும்.

தேதி	நேரம்	நாடாளுமன்றத் தொகுதி
04.02.2024	காலை 9.00 மணி	திருவண்ணாமலை, ஆரணி
	மாலை 3.00 மணி	பெரம்பலூர், திருச்சி
05.02.2024	காலை 9.00 மணி	கரூர், திண்டுக்கல்
	மாலை 3.00 மணி	காஞ்சிபுரம், புதுச்சேரி

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சோ.கி. மூர்த்தி

பிப்ரவரி 4 (2002)

கழகம் தொடங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, சென்னை, வடபழனி – கோடம்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தைத் தொடங்கியபோது, சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றினார்.

1953 முதல் கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று 18 முறை சிறை சென்றவர்.

பொதுக்குழு உறுப்பினராக, தலைமைக் கழக அலுவலக செயலாளராக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி நிலைக்குழுத் தலைவராகவும், சென்னை நகர வளர்ச்சி மேம்பாட்டுக்குழுத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார்.

இவரது தொண்டினைப் பாராட்டி தலைவர் கலைஞர் அவர்கள் தனது உடன்பிறப்புக்கான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.